# சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வரத் தேவையான அம்சங்கள்

# The Checklist for Ending Tyranny

**Peter Ackerman and Hardy Merriman**

From the book: 'Is Authoritarianism Staging a Comeback?'
Editors: Mathew Burrows and Maria J. Stephan
The Atlantic Council, Washington D.C. — 2015
Translation: April 2018

# TRANSLATOR'S NOTES

# சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வரத் தேவையான அம்சங்கள்

**பீட்டர் ஆக்கர்மேன், ஹார்டி மெர்ரியம்**

இன்றைய காலகட்டத்தில் மிக மோசமான சச்சரவுகள் நாடுகளுக்கிடையே இருப்பதில்லை. மாறாக, குறிப்பிட்ட நாட்டிற்குள்தான் சச்சரவு என்று கூறலாம். சர்வாதிகாரிகள், அவர்களால் ஒடுக்கப்படும் மக்கள் ஆகியோருக்கு இடையே நடக்கும் போராட்டம்தான் இன்று அதிகம் நடக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பொது மக்களுக்கு இருப்பதாக நம்பப்படும் வழிகள் இரண்டு. முதலாவது சர்வாதிகாரியின் செயல்களைப் பொறுத்துக்கொண்டு அடங்கிப்போவது. காலப் போக்கில் மிதமாகும் அல்லது சாதாரன நிலை வரும் என்று நம்புவது. அல்லது சுதந்திரம் பெற வேண்டி, அரசுக்கு எதிராக, வன்முறைப் போராட்டங்களை நடத்துவது. இது போன்ற குறுகிய பார்வை, சில உண்மைகளின் அடிப்படையில் மறுக்கப்படக்கூடியது என்று கூறலாம். குடிமைச் சமூக எதிர்ப்புப் போராட்டங்கள் (இதை சில சமயங்களில் 'மக்கள் சக்தி" இயக்கம் அல்லது அகிம்சைப் போராட்டங்கள் என்றும் கூறுவார்கள்), பெரும்பாலோர் நம்புவதற்கு மாறாக, குறுகிய கால இடை வெளிகளில் பல முறைகள் நடந்திருக்கின்றன. 1900 ஆண்டிலிருந்து எடுத்துக்கொண்டால், பெரிய அளவிலான குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கப் போராட்டம், ஆட்சியாளருக்கு எதிராக, ஒரு வருடத்திற்கு ஒரு போராட்டம் என்ற அளவில் நடந்திருக்கிறது. குறிப்பாக 1972ஆம் ஆண்டிலிருந்து எடுத்துக்கொண்டால், உலக அளவில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த, போராட்டங்கள் மற்றும் ஜனநாயக ரீதியிலான மாற்றங்கள், இந்த வகையிலான, குடிமக்கள் தலைமையேற்று நடந்த இயக்கங்களால் ஏற்பட்டவைதான். ஆனாலும் கொள்கை வகுப்பாளர்கள், அறிஞர்கள், பத்திரிக்கையாளர்கள், மற்ற ஆர்வலர்கள், பார்வையார்கள் ஆகியோர், சர்வாதிகாரத்தை வலுவிழக்கச்செய்து, தங்களுக்கான உரிமைகளை வன்முறையின்றி வென்றெடுக்கும் சாதாரண மக்களின் திறனைக் குறைவாக மதிப்பிட்டுவருகிறார்கள்.

## தவறும் ஆய்வுத் திறன்

2011இல் டுனிஷ்யா எகிப்து ஆகிய நாடுகளில் நடந்த மக்கள் எழுச்சி, 2014இல் உக்ரேனில் நடந்த மக்கள் போராட்டங்கள். ஆகியன வேரூன்றிய குடிமைச் சமூக எதிர்ப்பு, அதன் சக்தி, நிலையை மாற்றக்கூடிய வலிமை ஆகியன, அனைவரையும் வியப்படையச் செய்யும். இந்த எழுச்சி வரும் என்று யாருமே அறிந்திருக்கவில்லை. அதே சமயம், இந்த அம்சம் அதைத் தனித்தன்மை கொண்டதாக மாற்றவில்லை. அதே போல செர்பியாவில் 2000ஆம் ஆண்டு நடந்த ‘வண்ணப் புரட்சி’ (COLOR Revolution) ஜியார்ஜியாவில் 2003ஆம் ஆண்டு, மற்றும் உக்ரேனில் 2004ஆம் ஆண்டு என எதுவுமே யாரும் எதிர்பார்க்காததுதான். இதற்குச் சில பத்தாண்டுகளுக்கு முன்பாக ஒருங்கிணைக்கப்பட்ட அகிம்சை எதிர்ப்பு, பிலிப்பைன்ஸின் சர்வாதிகாரி ஃபெர்டினாண்ட் மார்க்கோஸ் (1986), சிலியின் சர்வாதிகாரி அகஸ்டோ பினோசெட் (1988), போலந்து நாட்டில் சோவியத் யூனியன் அரசு (1986), மற்றும் தென் ஆப்பிரிக்காவின் நிறவெறி அரசு (1992) வீழ்ச்சிகளில் முக்கியப் பங்கு வகிக்கும் யாரும் எதிர்பார்க்கவில்லை.

சர்வதேச மற்றும் பிராந்திய அலவிலான நிபுணர்கள், மேலே குறிப்பவற்றையும் இன்னும் இது போன்ற அகிம்சை அடிப்படையில் நடந்த வெற்றிகரமான போராட்டங்களையும் வரலாற்று முரண்கள் என்றும், குறிப்பிட்ட காலகட்டத்தில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில், குறிப்பிட்ட நாடுகளில் மட்டுமே நிகழ்ந்தவை என்றும் பிரயாசைப்பட்டு விளக்கம் கொடுக்கிறார்கள். இவற்றின் இயங்குதன்மை குறிப்பிட்ட நிகழ்வுக்கானது மட்டுமே என்றும், இதை வைத்து, பல்வேறு விதமான அடக்கு முறைகளுக்கு எதிராக பொதுமக்கள் பயன்படுத்தத் தக்க பொதுவான போராட்டத் திட்டமாக, அதன் மூலம் மக்களுக்கு அதிகாரம் வரக்கூடியதாக கருதப்பட முடியாது என்றும் கூறுகிறார்கள். ஆனால், உலகெங்கிலுமுள்ள சர்வாதிகாரிகள் இது போன்ற மௌடீகமான நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதில்லை. தங்களது ஆட்சிக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக மக்கள் சக்தி இயக்கங்களை அவர்கள் அடையாளம் கண்டுகொள்கிறார்கள்.

கடந்த தலைமுறைக் காலத்தில் அகிம்சைப் போராட்டங்கள் மிக அதிகமாக நிகழ்ந்ததைக் கணக்கில் கொண்டு பார்த்தால், ஜனநாயக ரீதியிலான மாற்றங்களை ஆதரிப்பவர்களுக்கு, மக்கள் சக்தி இயக்கங்கள் எதனால் வெல்கின்றன என்பதைப் பற்றிய புரிதல் இருப்பது மிக அவசியமானது. அகிம்சைப் போராட்டங்கள், பல விதமான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைய இரு முக்கிய அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. எதேச்சாதிகார அரசுகள் அனைத்துமே, தங்களால் ஒடுக்கப்படும் பெரும்பாலான மக்களின் பரவலான கீழ்ப்படிதலைச் சார்ந்திருக்கின்றன. அடுத்ததாக, இப்படிப்பட்ட அரசுக்கு மக்கள் அனைவருமே விசுவாசமாக இருக்க மாட்டார்கள்.

## குடிமைச் சமூக எதிர்ப்பு செயல்படும் விதம்

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு உண்மை நிலைகளின் அடிப்படையில், குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள், திட்டமிட்ட முறையில், அகிம்சா வழிகளில் மக்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து, அரசின் மேலிருக்கும் விசுவாசத்தை விலக்கிக்கொள்ள வலியுறுத்துவார்கள். வேலைநிறுத்தங்கள், புறக்கணிப்பு, பொது ஆர்ப்பாட்டங்கள், மற்றுமுள்ள பிற செயல்பாடுகல் மூலம் இதைச் செய்வார்கள். இவற்றின் வழியாக, அடக்குமுறைக்குத் தடைகளை ஏற்படுத்தி, உரிமைகள், சுதந்திரம் மற்றும் நீதியை வென்றெடுக்கவும் போராடுவார்கள். குடிமைச் சமூக எதிர்ப்பு பரவிப் பெருகும்போது, எதிர்ப்பாளர்களுக்கு எதிரான அடக்குமுறை பெரும்பாலான சமயங்களில், அமைதியை மீட்டெடுப்பதற்கு பதிலாக, எதிரான சூழ்நிலையே உருவாகும்.

போராட்டங்களால் ஏற்படும் தடைகளால் அரசாங்கம் இயங்குவதற்குத் தேவையான மிக முக்கியமான அமைப்புகளுக்குள் விரிசல்கள் உருவாக ஆரம்பிக்கிறது. (காவல் துறை, ராணுவம், ஊடகங்கள், அரசியல், அதிகார வர்க்கம், மற்றும் பொருளாதார அமைப்புகள் ஆகியன). இந்த விரிசல்கள் பல சமயங்களில், அணி மாறுவதில் முடியும். அதன் எண்ணிக்கை அதிகரித்தால், எதேச்சாதிகார ஆட்சி நீடிக்க மிகவும் அடிப்படையான அம்சங்களான, பொருள் வள ஆதாரங்கள், மனித வளம், மக்களின் திறமைகளும், அறிவுத் திறன்களும், தகவல் பரிமாற்றச் சூழல்கள், தடைகளை ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் ஆகியன சிதைந்துபோகும். உத்தரவுகளை அமல்படுத்தும் அதிகாரத்

தொடர் அமைப்பு முறையாகச் செயல்படாத நிலையில், சர்வாதிகாரிகளுக்கு மாற்று வழிகள் மிகக் குறைவாக உள்ள நெருக்கடிக்குத் தள்ளப்படுவார். இவ்வாறான, அகிம்சைச் செயல்பாடுகளின் தொடர் அழுத்தங்களால், அவர்களது பதவியிலிருந்து விலக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதன் காரணமாக, ஒட்டு மொத்த அளவில் மிகப் பெரிய மாறுதல்கள் ஏற்படும்.

**திறன்கள் VS நிபந்தனைகள்**

குடிமைச் சமூக எதிர்ப்புகளால் உருவாகும் தாக்கங்கள் கூடிக்கொண்டே வரும் இந்தச் சமயத்தில், இவற்றின் விளைவுகளைத் தீர்மானிக்கும் அம்சங்களைப் பற்றி ஆராய்வது முக்கியமானது. பிரச்சினைகள் உருவாகும் முன்னர் இருந்த நிலமைகள்தாம், இயக்கமோ, எதேச்சாதிகார அமைப்போ வெல்வதற்குக் காரணங்களாக இருக்குமா அல்லது, போராட்டங்களின்போது இரு தரப்பினரின் வெற்றி அவர்களது அடிப்படைத் திட்ட தேர்வுகள் மற்றும் பிரச்சினைகளைக் கையாளும் திறன் ஆகியவற்றைப் பொறுத்து அமையுமா?

இது குறித்து விமர்சனபூர்வமாக ஆய்வு செய்த அகிம்சைப் போராட்டம் சார்ந்த சர்வதேச மையத்தின் (International Center on Nonviolent Conflict) கருத்தின்படி, இயக்கத்தின் மேல்நோக்கிய பயணங்கள் மற்றும் விளைவுகள் ஆகியன சூழ்நிலைகளின் அடிப்படையில் இல்லாமல் திறன்களை அடிப்படையாகக் கொண்டவை என்று கூறுகிறது. இந்தக் குறிப்பிட்ட விஷயம், எதிராளி எந்த அளவுக்கு வன்முறையைப் பிரயோகிக்க விருப்பம் உள்ளவராய் இருக்கிறார் என்பதைப் பொறுத்தது. 'அகிம்சை மூலமான எதிர்ப்பு, பொதுவாக, வனமுறையைப் பிரயோகிக்கத் தயங்கும், அல்லது மிதமான தன்மை கொண்ட எதிர்ப்பாளர்கள் இருக்கும்போதுதான் பலனிருக்கும்' என்றுதான் பொதுவாகச் சொல்வார்கள். ஆனால், அவர்கள் வசதியாக மறந்துவிடும் நிகழ்வுகள் பல இருக்கின்றன. தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக்கு எதிரான போராட்டம், சிலியின் பினோசெட், பிலிப்பைன்சின் மார்க்கோஸ், போலந்தின் கம்யூனிஸ்ட் ஆட்சியை அப்புறப் படுத்தியது போன்றவை சில உதாரணங்கள். இன்னும் சமீபகாலத்தில் பார்த்தால், எகிப்தில் ஹொஸ்னி முபாரக், டுனிசியாவின் பென் அலி, போன்றவர்களை உதாரணமாகச் சொல்லலாம்.

இதில் எந்த அரசும் அடக்குமுறையை பயன்படுத்தத் தயங்கியது என்று சொல்ல முடியாது.

இந்தப் பண்புக் கூறுகள் சார்ந்த உதாரணங்கள், எண்ணிக்கை அடிப்படையிலான ஆய்வுகளோடு ஒத்துப்போகின்றன. 1975 - 2006 வரை எதேச்சாதிகார அரசு முறையிலிருந்து வேறு முறைக்கு மாறியது 64 முறைகள் நடந்திருக்கின்றன. குடிமைச் சமூக எதிர்ப்பு முறைகளே இந்த மாறுதல்களுக்குக் காரணமாக இருந்தன. இந்தக் குடிமைச் சமூக எதிர்ப்பு முறைகளின் மீது பல்வேறு வகையில் தாக்கங்களை ஏற்படுத்திய கட்டமைப்பு அம்சங்கள் குறித்து 2008ஆம் ஆண்டில் சுதந்திர இல்லம் என்ற அமைப்பு ஆய்வு நடத்தியது. அந்த ஆய்வில் வெளியிடப்பட்ட சில முக்கிய அம்சங்கள் வருமாறு:

> *அரசியல் அல்லது சூழ்நிலைகள் சார்ந்த அம்சங்களோ குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்களின் வெற்றியையோ, தோல்வியையோ தீர்மானித்தன என்று சொல்லக்கூடிய அளவுக்குப் புள்ளியியல் சார்ந்த ஆதாரங்கள் இல்லை. குடிமைச் சமூக இயக்கங்கள் எந்த அளவுக்கு பொருளாதாரத்தில் பின் தங்கிய, குறைவான வளர்ச்சியடைந்த ஏழை நாடுகளில் எந்த அளவுக்கு வெற்றியடைந்ததோ, அதே அளவுக்குதான், வளர்ச்சியடைந்த, செல்வச் செழிப்பு மிகுந்த சமூகங்களிலும் வெற்றிகளைப் பெற்றது. ஒற்றுமையுடன் இயங்கும் குடிமைச் சமூக எதிர்ப்பு அமைப்புகளில் இனம், மதம் ஆகிய பிரிவுகளால் பெரிய தாக்கங்கள் ஏற்பட்டதற்குக் குறிப்பிடத் தக்க ஆதாரங்கள் ஏதுமில்லை என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. அதே போல, குடிமைச் சமூக இயக்கங்கள் தமக்கான ஆதரவைப் பெறுவதில், வெவ்வேறான வகைப்பட்ட அரசுகளுக்கு ஏற்றாற்போல பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை என்றும் ஆய்வுகள் கூறுகிறது.*

குடிமைச் சமூக இயக்கங்களின் செயல்பாடுகளில் குறிப்பிட்ட தாக்கங்களை உருவாக்கக்கூடியது என்று புள்ளிவிவரக் கணக்கின்படி நிரூபணமான விஷயம் ஒன்று மட்டும்தான்.

*எந்த அளவுக்கு ஒரு அரசின் அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்கின்றனவோ, அந்த அளவுக்குத் தாக்கங்களும் இருந்திருக்கின்றன. அதிகாரக் குவிப்பு மிக அதிக அளவில் இருந்தால் அந்த சமூகத்தில் குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்களின் வளர்ச்சி மிக ஆரோக்கியமாக, விரைவாக இருக்கிறது. இதன் மூலம் அந்த அரசை எதிர்க்கும் அளவுக்கு குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கம் பலம் வாய்ந்ததாக ஆகிறது. இதற்கு எதிரான நிலை அதே போன்ற எதிர் நிலையையே விளைவாக உருவாகிறது. அதாவது, அதிகாரப் பரவல் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குக் குறைவாகவே குடிமைச் சமூக எதிர்ப்பின் வலிமையும் இருக்கிறது.*

ஆகவே அதிகாரக் குவிப்பு அல்லது பரவலாக்கம் என்னும் ஒரே ஒரு சூழல்தான் குடிமைச் சமூக அமைப்புகளின் போக்கைத் தீர்மானிக்கிறது. இதர புறச் சூழல்கள் தீர்மானிப்பதில்லை. அதாவது, சூழ்நிலைகள் குடிமைச் சமூக இயக்கங்கள் மீது பெரிதாகத் தாக்கங்களை ஏற்படுத்துவதில்லை. ஆகவே, சூழ்நிலைகள் குடிமைச் சமூக எதிர்ப்புச் செயல்பாடுகளைத் தீர்மானிக்கிறது என்ற கருத்து பலவீனமானது என்பதைத்தான் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

2011ஆம் ஆண்டு வெளியான 'எதனால், குடிமைச் சமூக எதிர்ப்பு வெற்றி பெறுகிறது: அகிம்சை சார்ந்த திட்டச் செயல்பாட்டின் தருக்க முறை (Why Civil Resistance Works: The Strategic Logic of Nonviolent Conflict) என்ற விருது பெற்ற நூலில் எரிக்கா செனோவெத், மாரியா ஸ்டீஃபன் ஆகிய ஆய்வாளர்கள் 900 - 2006 வரை நடந்த 323 வன்முறை மற்றும் அகிம்சை போராட்டங்களைக் குறித்துத் தீவிரமாக அலசி ஆராய்ந்தார்கள். அகிம்சைப் போரட்டங்களில் 53 சதவிகிமும், வன்முறைப் போராட்டங்களில், 26 சதவிகிதமும் வெற்றி பெற்றன என்பதுதான் இதன் முடிவில் தெரியவந்த மிக முக்கியமான உண்மை.

அரசின் அடக்குமுறை, கட்டமைப்பு மாறுதல்கள், ஆகியன குடிமைச் சமூக எதிர்ப்பாளர் போராட்டத்தின் வெற்றி மீது குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது உண்மைதான் (ஆனால் பொதுவில் நினைப்பதை விட மிகக்

குறைவாகவே, அதாவது, சுமார் 35% அளவுக்கே பாதிப்பு ஏற்பட்டது). அதே சமயத்தில் கட்டமைப்பு சூழ்நிலைகள் காரணமாக இயக்கச் செயல்பாடுகளின் விளைவுகள் முடிவாவதில்லை என்பதையும் எரிக்கா செனோவெத்தும் மாரியா ஸ்டீஃபனும் கண்டறிந்துள்ளனர். தாங்கள் திரட்டிய விவரங்களை முறையாக ஆய்வுசெய்து இவர்கள் கூறியதாவது: 'குடிமைச் சமூக எதிர்ப்புப் போராட்டங்களின்போது சூழ்நிலை என்னவாக இருந்தாலும், அதையெல்லாம் மீறிப் பெரும்பாலான சமயங்களில் அவை வெற்றிபெறுகின்றன என்பதுதான் உண்மை.'

இந்த முடிவுகள், குடிமைச் சமூக எதிர்ப்பின் வெற்றி குறித்த மரபு ரீதியான புரிதலை வெளிப்படுத்துகிறது. பிரச்சினைகளின் முடிவு, அப்போதைய சூழல்களின் அடிப்படையில் இல்லாமல், திறன்கள், திட்டங்களின் தேர்வு ஆகியனவற்றைப் பொறுத்து அமையும். இது உண்மையில் ஆச்சரியமான விஷயம் அல்ல. ஏனென்றால், சர்வாதிகாரத்தை எதிர்ப்பவர்கள், முதலில் எந்த முறையில் எதிர்ப்பது என்பதைப் பற்றிதான் முடிவெடுப்பார்கள். வெளிச் சூழல்களைப் பொறுத்துதான், விளைவு இருக்குமானால், எப்படி எதிர்ப்பது என்ற திட்டமிடலுக்கு அவசியமே இராது. எதிர்ப்புப் போராட்டங்கள், வன்முறையின் வழியாகவோ, அகிம்சை வழியாகவோ இருந்தாலும் முடிவு ஒன்றாகவே இருக்கும்.

ஆனால் திரட்டிய விவரங்கள் வெளிப்படுத்தும் உண்மை வேறு. 1900 - 2006 வரை நடந்த மக்கள் சக்தி இயக்கங்கள் நடத்திய போராட்டங்களில் பெரும்பாலானவை வெற்றி பெற்றன. இதைப் பற்றி நடந்த சமீப ஆய்வுகளின்படி, வெற்றி சதவிகிதங்களில் அதிக மாறுதல்கள் இல்லை என்று தெரியவந்துள்ளது. குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கத்தினர், எளிதில் வெல்லக்கூடிய போராட்டங்களையே தேர்வு செய்கிறார்கள் என்று சிலர் கூறலாம். இந்த ரீதியிலான விமர்சனத்தை செனோவெத்தும் மாரியா ஸ்டீஃபனும் எதிர்பார்க்கவே செய்தனர். அதற்கு அவர்கள் தரும் பதில் இதுதான்: 'பெரும்பாலான குடிமைச் சமூக எதிர்ப்புப் போராட்டங்கள், சர்வாதிகார ஆட்சியில்தான் துவங்கின. அரசுக்கு எதிராக நடத்தப்படும் அமைதியான எதிர்ப்பும்கூட மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் அரசுகளுக்கு எதிராகவே இத்தகைய போராட்டங்கள் நடந்தன.'

நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் தாமஸ் செல்லிங் 50 வருடங்களுக்கு முன்பாக குடிமைச் சமுக எதிர்ப்பு, தேசியப் பாதுகாப்பு முறையாக: என்ற நூலில் ‘அடக்கு முறைக்கு எதிராக அகிம்சை’ என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பின் வருமாறு கூறியிருக்கிறார்:

> *சர்வாதிகாரியும் அவரது மக்களும் ஒரே நிலையில் இருக்கின்றனர். அவர் விரும்பும் பெரும்பாலானவற்றை அவர்களால் மறுக்க முடியும். அதாவது, அவர்கள் இயக்க ரீதியாக ஒன்றுபட்டுத் தங்களது ஒத்துழைப்பை அளிக்க மறுத்தால், இது சாத்தியம். அதே போல ஆட்சியாளரும் அவர்களுக்கு வேண்டிய ஏறக்குறைய எல்லாவற்றையும் மறுக்க முடியும். இதை அவரது கட்டுப்பாட்டிலுள்ள, ராணுவப் படைகள் மூலமாக செய்ய முடியும். இது ஒரு விதமான கொடுக்கல் வாங்கல் தொடர்புடையது என்று சொல்லலாம். இதில் இரு தரப்பினருமே, தேவையான அளவுக்குக் கட்டுப்பாடாகவும் ஒன்றிணைந்தும் செயல்பட்டால், பரஸ்பரம் வேண்டியவற்றில் பெரும்பாலானவற்றை மறுக்கலாம். இதில் யார் ஜெயிப்பார்கள் என்பதைக் கணிப்பது கடினம்.*

செல்லிங்கைப் பொறுத்தவரை குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள் பயன்படுத்தும் உபாயங்களுக்கு விளையும் லாபங்களும் இருப்பது போல, அவர்களது எதிரியான சர்வாதிகாரிக்கும் இதே நிலை இருக்கும். இந்தச் செலவினங்களையும், பயன்பாடுகளையும் தங்களது தரப்பில் மிகத் திறனுடன் யார் பகிர்ந்தளிக்கிறாரோ அவர்தான் இதில் வெல்லப் போகிறார்.

திறமையுள்ள குடிமைச் சமூக எதிர்ப்பாளர் இயக்கத் தலைவர், எதிர்த் தரப்பினரிடமிருந்து அணி மாற்றத்தை அதிகப்படுத்த, பல தடங்கல்களை உருவாக்க விரும்புவார். அதிலும் குறைவான தடைகள் மூலம் அதிகபட்ச அணி மாற்றங்களை ஏற்படுத்தும் உபாயங்களை பயன்படுத்துவார். திறனுள்ள சர்வாதிகாரி, கீழ்ப்படிதலை உருவாக்குவது மிக அவசியமானதாக எண்ணிச் செயல்படுவார். அதிலும் மிகக் குறைவான வன்முறைப் பிரயோகத்தில், அதிக பட்ச கீழ்ப்படிதல் உருவாக்க முடிவதுதான் அவருக்கு உகந்ததாக இருக்கும். இதில் மிக அதிகமான அணி தாவல் அல்லது அதிகபட்ச கீழ்ப்படிதல்

ஆகியவற்றில் எது அதிகமாக சாத்தியமாகிறது, என்பதுதான் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கும்.

**தேவைப்படும் திறன்களுக்கான பட்டியல் (சரிபார்ப்புப் பட்டியல் - Checklist)**

திறன்கள், திட்டங்களின் தெரிவு ஆகியனதான் குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்களின் விளைவுகளைத் தீர்மானிக்கக்கூடிய அம்சங்கள் என்றால், பல்வேறு வகைப்பட்ட இயக்கங்களின் பகிர வேண்டிய செயல் திறமைகள், திறன்கள் மற்றும் தெரிவுகள் ஆகியன வெற்றியின் பொதுக் கூறுகளை உருவாக்கும். எந்த ஒரு இயக்கத்தின் பல்வேறு அம்சங்கலைப் பற்றி ஆராயலாம். ஆனாலும் இயக்கம் எதன் அடிப்படையில் இயங்கினாலும், அவற்றில் மூன்று திறன்கள் மிக முக்கியமானவை.

1. **மக்களை ஒன்றுபடுத்தும் திறன்**
2. **செயல்முறை சார்ந்த திட்டமிடல்**
3. **அகிம்சைச் செயல்பட்டில் கட்டுப்பாடு**

எந்த ஒரு குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கத்திலும் இத்தகைய திறன்கள் இருந்தால், மூன்று விதமான சக்தி மிகுந்த விளைவுகள் அந்த இயக்கத்தின் போக்குகளாக உருவாகி, அந்த இயக்கத்தின் வெற்றியின் மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய போக்குகள் வருமாறு:

1. குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கத்தில் குடிமைச் சமூக மக்களின் அதிகப் பங்கேற்பு
2. ஒடுக்குமுறையின் தாக்கம் குறைவது மற்றும் எதிர்விளைவு அதிகரித்தல்
3. இயக்கத்தின் எதிர்த் தரப்பினரிலிருந்து அதிக எண்ணிக்கையில் அணி மாற்றம் நிகழ்தல்.

இவை அனைத்தையும் ஒன்றிணைத்தால், மேற்குறிப்பிட்ட மூன்று காரணத் திறன்களையும் மற்றும் போக்குகளையும், இருக்க வேண்டிய திறன்களின் பட்டியல் என்று குறிப்பிடுகிறோம். இந்தப் பட்டியலை வைத்து, தங்கள் இயக்கத்தில் இந்தத் தன்மைகள் / திறன்கள் இருக்கின்றனவா என இதர இயக்கங்கள் சரிபார்த்துக்கொள்ள இயலும் என்பதால் இது சரிபார்ப்புப் பட்டியல் எனக் குறிப்பிடப்படுகிறது. இதுபோன்ற காரணத் திறன்களையும்,

போக்குகளையும் உருவாக்குவது, இயக்கத்தின் வெற்றியின் சாத்தியங்களை அதிகரிக்கும். அந்த வகையில் இந்த சரிபார்ப்புப் பட்டியல் வெற்றியை நிச்சயிக்கும் சூத்திரம் என்று கூற முடியாது என்றாலும், இதில் தொடர்புள்ள மக்கள் அவர்களது சிந்தனையை ஒருங்கமைவு செய்வதற்கும், செயல்திறனை அதிகரிப்பதற்கும் இது ஒரு வரைவுச் சட்டம் போலப் பயன்படும்.

இந்த வகையில் இப்பட்டியலின் முக்கியச் செயல்பாடு என்னவென்றால், பிரச்சினையின்போது ஏற்படக்கூடிய, தொடர்பற்ற நிலையைத் தவிர்க்கும். எந்த வகைக் குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கமாக இருந்தாலும் எதிர்நோக்கக்கூடிய மிகப் பெரிய சவால்களில் ஒன்று பல்வேறு அம்சங்கள் ஒன்று சேர்வதால் ஏற்படக்கூடிய சிக்கலான சூழல் எனக் கூறலாம். பனிமூட்டம் போல தெளிவற்ற நிலை இருக்கும்போது, முடிவெடுப்பதற்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய அம்சங்கள் என்பதைத் தீர்மானிப்பது கடினமாக இருக்கலாம்.

ஒரு செயல்பாட்டாளர் அல்லது வெளியிடப் பார்வையளர், இயக்கத்தின் எதிர்கால வெற்றி வாய்ப்புகள் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டுமானால், மூன்று வகையான திறன்கள் மற்றும் போக்குகள் இருக்கிறதா என்பதை வைத்து மதிப்பீடு செய்ய முடியும். இதன் மூலம் இயக்கத்தின் தற்போதைய நிலை, பலமான அம்சங்கள், பலவீனங்கள், எதிர்கால நிலை வெற்றிகரமாக இருக்குமா என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

இந்தப் பட்டியலில் உள்ளவற்றை விரிவாகப் பார்ப்போம்

**1. மக்களை ஒன்றுபடுத்தும் திறன்**

சர்வாதிகாரிகள் பிரித்தாளும் திறனில் வல்லவர்களாக இருப்பார்கள். அவர்களை எதிர்கொள்பவர்கள் மக்களை ஒன்றிணைப்பதில் திராமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒற்றுமையை வளர்ப்பது, பராமரிப்பது என்பது பன்முகத் தன்மையுள்ள ஒரு பணி. இதை செய்வதற்குத் தேவையான மிக முக்கியமான அம்சம், அனைவரும் பகிர்ந்து கொள்கிறார் போன்ற, இணைக்கிற ஒரு நோக்கம் குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கத்திற்குத் தேவை.

இதைச் சாதிப்பதற்கு, இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு, தாங்கள் எந்த மக்களைத் திரட்ட விரும்புகிறார்களோ, அவர்களின் குறைகள், அபிலாஷைகள், கலாச்சாரம், பல்வேறு பிரிவினரின் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றைப் பற்றிய ஆழ்ந்த அறிவு, புரிதல் இருக்க வேண்டும். இதுதான் மக்களைத் திரட்டுவதற்கும், பெருவாரியான ஆதரவைப் பெறுவதற்கும், தேவையானது.  பயனுள்ள நோக்கம் அல்லது லட்சியம் என்பது சாதாரண மக்களின் அனுபவங்கள் மற்றும் உணர்வுகளுடன் ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் ஒன்றுபட்ட குடிமைச் சமூக எதிர்ப்பில் தங்களை இணைத்துக்கொள்ள விரும்ப வேண்டும்.

ஒற்றுமையை வளர்க்கத் தேவையான மற்றொரு முக்கியமான அம்சம், சரியான தலைமை, கட்டமைப்பான இயக்கம், அதனுடன் சட்டபூர்வமான அங்கீகாரம். இயக்கங்களில் பங்கு கொள்வது என்பது தாமாக முன்வந்து செய்வதாகும். அதனால், இயக்கத்துக்கெனத் திரண்டிருக்கும் மக்களின் மேல் அதன் தலைவருக்கு முறைப்படுத்தப்பட்ட அதிகாரம் என்று ஏதும் இல்லை. இதனால் எடுக்கப்படும் முடிவுகள், முறையாக எடுக்கப்பட்டதுதான் என்று மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி இருக்க வேண்டும். இதைச் செய்வதற்கு ஒவ்வொரு இயக்கமும் ஒரு முறையைப் பின்பற்றுகிறது. சிலவற்றில் அதிகாரக் கட்டமைப்பு இருக்கும். சிலவற்றில் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கும். இன்னும் சில இயக்கங்களில், இரண்டின் கலவையான முறையைப் பின்பற்றுவார்கள்.

இயக்கத்தின் தலைமை மற்றும் கட்டமைப்பு எப்படி இருந்தாலும், வெவ்வேறு விதமான தலைமைகள் இருக்கின்றன. இவை அனைத்தையும் ஒத்திசைவாக செய்வதில்தான் ஒற்றுமையே அடங்கியுள்ளது. தேசிய அளவில், அலங்காரப் பதவியாகவோ, மக்களின் செல்வாக்கு பெற்றவராகவோ தலைவர் இருந்தாலும் உள்ளூர் அளவில் இருக்கும் தலைவர்கள், கூட்டணிகளை ஏற்படுத்துவதிலும், பேச்சுவார்த்தை நடத்துவதிலும், பல்வேறு குழுக்களிடையே, இணைப்பு ஏற்படுத்துவதிலும் திறமை உள்ளவராக இருக்க வேண்டும். எல்லா மட்டங்களிலும் இருக்கும் தலைவர்கள், (உள்ளூர் மற்றும் தேசிய அளவில்) நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்வேறு குழுக்களைப்

பிரதிநித்துவப்படுத்தும் அவர்கள் நீண்ட கால ஒற்றுமை நிலைத்து இருக்க ஒன்றாகப் பணிசெய்வது மிக அவசியம்.

1980களில், தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் குடிமைச் சமூக எதிர்ப்பு அமைப்புகளின் ஒற்றுமையில் இந்த அம்சங்களை பயன்படுத்தியதற்கான ஆதாரங்களைக் காணலாம். அந்தக் காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான குடிமைச் சமூக அமைப்புகள் ஆங்காங்கே முளைத்தன. அங்கு ஊராட்சி அளவில் நல்ல தண்ணீர், அரசின் சேவைகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுடன் இயக்கங்கள் செயல்பட்டன. அதே சமயத்தில் அனைவருக்கும் பொதுவான நோக்கமான, நிறவெறியை முடிவுக்குக் கொண்டுவருவது, தேசிய அதிகாரப் பகிர்வு குறித்த சமாதானம் பொதுக் கோரிக்கைகளுக்காக ஒன்றிணைவது என்ற அளவில் போராட்டங்கள் நடந்தது. இந்த குடிமைச் சமூகக் குழுக்கள் ஒன்றுப்பட்ட ஜனநாயக முன்னணி என்ற பெயரில் ஒன்றிணைந்து செயல்பட்டன. இதில் திறமை மிக்க உள்ளூர் தலைவர்கள் உள்ளூர் கோரிக்கைகளுக்காக, பொதுமைப்படுத்தப்பட்ட போராட்ட உபாயங்களை (உதாரணமாக பொருட்கள் புறக்கணிப்பு) கையாள்வது, அதே சமயத்தில் தேசிய அளவிலான இயக்கத் தலைமையுடன் தொடர்பு வைத்திருத்தல், அவர்களுடன் ஒன்றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றையும் செய்துவந்தனர்.

## 2. செயல்முறைத் திட்டம்

பயனுள்ள குடிமைச் சமூக எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவது பொதுவாக பலரும் நினைப்பதைவிட மிகச் சிக்கலானது. குடிமைச் சமூக எதிர்ப்பு என்றால், முதலில் நினைவுக்கு வரும் உருவகம் மறியல் செய்வது மட்டும்தான். ஆனால் இது போல இருக்கும் நூற்றுக்கணக்கான உத்திகளில் ஒன்றுதான் இது. பயனுள்ள முறையில் இயங்கும் இயக்கங்கள் எந்த விதமான உத்தியை எப்போது, எங்கே, எப்படி, யாரால் நடத்தப்பட வேண்டும், எதை இலக்காக வைத்து இருக்க வேண்டும், எவற்றை அடுத்தடுத்து செய்வது என்பதைப் பற்றியெல்லாம் நன்கு புரிந்துகொண்டு செய்வார்கள்.

இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமானால், திட்டங்கள், இயக்கத்தைப் பற்றியும் எதிர்த் தரப்பினரைப் பற்றியும் அவர்கலது பலம்,

பலவீனங்கள், சந்தர்ப்பங்கள், அச்சுறுத்தும் விஷயங்கள், மற்றும் பிரச்சினையின் சூழ்நிலை, இதில், போராட்டத்தின் போக்கை பாதிக்கக் கூடிய நடுநிலையாய் இருப்பவர்கள், அல்லது கருத்து எதுவும் கூறாமல் ஒதுங்கியிருப்பவர்கள் (இதில் சர்வதேச சமூகங்களின் அங்கத்தினர்களும் அடங்குவர்) போன்றவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த தகவல்களை வைத்துக்கொண்டு, இயக்கங்கள் குறுகிய, மத்திய, நீண்ட கால நோக்கங்களையும், அந்தந்த காலத்துக்கான செயல் திட்டங்களையும் உருவாக்கலாம்.இந்தத் திட்டங்களும், நடக்கும் நிகழ்வுகளுக்கு ஏற்றாற்போல அதற்கு எதிர்வினையாக உருவாகும். திட்டம் வகுக்கும் முறையும், மனப்போக்கும்தான் இயக்கத்தில் பங்குகொள்பவர்களுக்கு எந்த திட்டத்தையும்விட மிக முக்கியமானது.

எந்த ஒரு பிரச்சினையின்போதும், சம்பந்தப்பட்டவர்களின் திறன்களின் சேர்க்கையும், நிலையையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். திட்டச் செயல்பாட்டின் அடிப்படையே, சூழ்நிலை குறித்த சரியான கணிப்புதான். அது இயக்கத்திற்குச் சாதகமாக இருக்கிறதா, அல்லது பாதகமாக இருக்கிறதா என்பதைப் பற்றிய முடிவுக்கு வர வேண்டும். இதன் பிறகுதான் இயக்கம் சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்துவது, பாதகமாக இருப்பவற்றைப் பற்றி நன்கு அறிந்துகொண்டு அவற்றைத் தன் திறனகள் மூலம் சரியாகக் கையாண்டு, அவற்றை வெல்லவும், மாற்றவும் அல்லது தவிர்க்கவும் செய்யலாம்.

இது போன்ற திட்டச் செயல்பாட்டிற்கான தெளிவான உதாரணமாக, போலந்தில் 1980களில் நடந்த சாலிடாரிட்டி இயக்கச் செயல்பாட்டினைச் சொல்லலாம். அப்போது தொழிலாளர்கள் தங்களது பலம், திறமைகள், போன்றவற்றைப் புரிந்துகொண்டு, அரசியல் ரீதியாகச் செல்லத்தக்க கோரிக்கையாகத் தங்களுக்குத் தேவையான சுதந்திரமான தொழிற்சங்கம் இயங்க அனுமதி வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினர் (ஆனால், அந்த சமயத்தில் அடைய முடியாத கோரிக்கையான கம்யூனிஸ்ட் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவது என்பதை அவர்கள் எழுப்பவேயில்லை). அதன் பின்னர், தங்களது பலமான ஒன்றுபட்ட தொழிற்சங்கத்தை உருவாக்க,

பல்வேறு துறைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கினர். இதன் பின்னர், அரசின் பலவீனமான, பொருளாதார நிலை, சட்டபூர்வ அங்கீகாரம் இல்லாமல் ஆட்சியில் இருப்பது ஆகியவற்றுக்கு எதிராக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதைத் தங்கள் பணியிடங்களை ஆக்கிரமிப்பது என்ற முறையில் போராட்டத்தை நடத்தினர். (வழக்கமாகத் தங்களது பணியிடங்களில் இருந்து வெளியே வந்து ஊர்வலங்களை நடத்தி தங்களது எதிர்ப்பைக் காட்டினர். இவ்வாறான போராட்டத்தை ஒடுக்குவது ஆட்சியாளர்களுக்கு சுலபமாக இருந்தது.)

இதோடு, பிற துறைகளான அச்சகங்கள், தனியாகப் பத்திரிக்கை நடத்தக்கூடியவர்கள் ஆகியோரையும் பயன்படுத்தத் தயாராக இருந்தனர். இது, அதற்கு முந்தைய பத்து வருடங்களில்தான் வளர்ச்சி கண்டிருந்தது. நகரங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்துக்குப் பயன்படுத்திவந்தனர். இது போலத் திட்டம் சார்ந்த நோக்கத்தையும், பொருத்தமான இலக்கு, அதற்குத் தகுந்த உத்திகள் (உள்ளிருப்புப் போராட்டம்,மாற்றுத் துறைகளைப் பயன்படுத்துவது) அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த திறன்களை பயன்படுத்தல், போன்றவற்றின் மூலமாக சாலிடாரிட்டி இயக்கம் மிகத் திறமையாக பிரச்சினைக்கு உரிய சூழலில் போராட்டத்தை வழிநடத்திச் சென்றது. தங்களது பாதகமான சூழ்நிலைகளை வெற்றி கண்டு தங்களது மிக முக்கிய லட்சியமான ஜனநாயக போலந்து அரசை உருவாக்குவதில் பெரும் முன்னேற்றம் கண்டனர். இறுதியாக 1989 ஆம் ஆண்டில் அவர்கள் இதில் வெற்றி கண்டனர்.

### 3. அகிம்சை என்ற ஒழுக்க முறை

அகிம்சை என்ற ஒழுக்க முறை என்பது வன்முறைக்கான தூண்டுதல் இருக்கும் சூழ்நிலையிலும் அகிம்சை முறையிலிருந்து விலகாமல் இருப்பதுதான். இதுதான் குடிமைச் சமூக எதிர்ப்பின் மிக முக்கிய நடை முறை சார்ந்த இயங்கு சக்தி. அகிம்சை ஒழுக்க முறையைப் போராட்ட வழியாக ஏற்றுக்கொண்டதால்தான், குடிமைச் சமூக இயக்கங்களில் பொதுமக்கள் அதிக அளவில் பங்குபெறுவார்கள். போராட்டத்துக்கு எதிரான அடக்குமுறையைச் செயல்படுத்த அதிக செலவு ஆகும். அடக்குமுறை

நேரெதிரான விளைவை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகரிக்கும். எதிர்த் தரப்பினருக்குப் பெரிய ஆதரவாக இருப்பவர்கள் அணி மாறுவதற்கும் இது தூண்டுதலாக இருக்கும். செனோவெத் மற்றும் ஸ்டீபன் ஆய்வு தெரிவிப்பது போல இந்த நன்மைகள் வன்முறை மற்றும் அகிம்சை சார்ந்த போராட்டங்கள் மூலம் பெறும் வெற்றிச் சதவிகிதத்தில் உள்ள வேறுபாடுகளை வெளிப்படுத்துகிறது.

அகிம்சை என்கிற ஒழுக்க முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமானால் இயக்கங்களுக்கு தன்னம்பிக்கை வேண்டும். குடிமைச் சமூக எதிர்ப்பாளர் இயக்கத்தினர் தங்களது பிரச்சினையை எதிர்கொள்ள இது பயனுள்ள முறையாக இருக்கும் என்று நம்புகின்றனர். குடிமைச் சமூக எதிர்ப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை வரலாற்று ஆவணங்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம். இதன் மூலம் கிடைத்த வெற்றிகள், இந்த வகையான போராட்ட முறை பயன் தரக்கூடியது என்பதை நிரூபிக்கக்கூடியதாக இருக்கின்றன. இயக்கங்கள் அகிம்சை முறையை வலியுறுத்த அதற்கான தனி கலாச்சாரத்தை, முறைமைகளை அமல்படுத்துகின்றன. உதாரணமாக, செர்பியாவில் ஸ்லோபோடன் மிலோசெவிக்கைப் பதவியை விட்டு இறக்கிய, ஓட்பர் இயக்கம் புதிதாகச் சேரும் அங்கத்தினர்களுக்கு குடிமைச் சமூக எதிர்ப்பு முறை எப்படி இயங்குகிறது என்பதைப் பற்றிப் பயிற்சி அளித்தனர். இதில் இந்த இயக்கம், எதனால் அகிம்சை வழியில்தான் போராட வேண்டும் என்பதையும் தெளிவாக வலியுறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அகிம்சை வழியைத் தொடர்ந்து கடைப்பிடிக்க நன்னெறி சார்ந்த வாதங்கள் மூலம் வலியுறுத்தும் முயற்சிகளுக்கு ஒரு இயக்கம் தேவையில்லை. மக்கள் தாங்களாகவே இதன் நடைமுறைப் பயன்களைப் பற்றி பரஸ்பரம் எடுத்துக் கூறிப் பின்பற்ற வேண்டும். இதற்காக (சமீப கால உதாரணமாக சிரியாவின் சோக நிகழ்வைச் சுட்டிக் காட்டலாம்) குடிமைச் சமூக எதிர்ப்பு முறையில் பொறுமையின்மை அல்லது நம்பிக்கையின்மை காரணமாக, வன்முறைக்குத் திரும்பியதால் மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டன.

### 4. குடிமைச் சமூக எதிர்ப்பில் அதிகமாகப் பங்கு பெறும் பொதுமக்கள்

குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்களில் பொது மக்கள் மிக அதிக எண்ணிக்கையில் சேர்ந்து வருவது, இந்த இயக்கத்தின் வெற்றியை வெளிப்படுத்துகிறது. இந்த நிலை சர்வாதிகாரிக்கு மக்கள் அளித்துவந்த ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் திரும்பப் பெற்றுவருவதையே காட்டுகிறது. இதனால் சர்வாதிகாரி எந்த அளவுக்கு பலவீனமடைகிறாரோ, அவரது அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள அந்த அளவுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிவரும். மேலும் எந்த அளவுக்குக் குடிமைச் சமூகத்தின் பங்கேற்பு இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஒடுக்குமுறையும் எய்தவர்களுக்கே பாதிப்பை உண்டாகும் வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. குடிமைச் சமூகத்தினரின் பங்கேற்பு அதிகரிக்க அதிகரிக்க, எதிர்த் தரப்பிலிருந்து அதிகம் பேர் அணி மாறுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மாபெரும் என்ணிக்கையில் குடிமைச் சமூகப் பங்கேற்புக்கான உதாரணத்தைக் கூறும்போது, 2012இல் எகிப்து, டுனீஷியா ஆகிய இடங்களில் நடந்த புரட்சியைப் பற்றிக் கூறலாம். அப்போது மிகப் பரவலான மக்கள் ஆதரவு காணப்பட்டது. ஆண்கள், பெண்கள், மதச்சார்புடையோர், மதச் சார்பற்றவர்கள், இளம் வயதினர், வயதானவர்கள், கீழ்த்தட்டு மக்கள், மத்திய தர வர்க்கத்தினர், தொழிலாளர்கள், நகரவாசிகள், கிராமத்தவர்கள் போன்றோர் பெரும் எண்ணிக்கையில் பங்குகொண்டனர். இதற்கு நேரெதிராக, சீனாவில் 1989இல் நடந்த மாணவர் இயக்கம், 2009இல் நடந்த பசுமை இயக்கம் ஆகியவற்றில் மக்கள் மில்லியன் கணக்கில் பங்குகொண்டனர். உலகச் செய்தியாக இது வெளிவந்தது. ஆனால், இந்த இரு போராட்டங்களுமே, அதன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. இதற்கு காரணங்கள், இவர்களுக்கு பரந்த அளவில் குடிமைச் சமூகத்தின் ஆதரவு கிடைக்கவில்லை. குறிப்பிட்ட இடத்தைத் தவிர பிற இடங்களில் ஆதரவு இல்லாதிருந்ததுதான் இதற்குக் காரணம்.

குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கு பெறுவதை உறுதி செய்வதற்கு, தேவைப்படும் திறன்களுக்கான பட்டியலில் மூன்று அம்சங்களைக் கவனத்தில் கொள்வது அவசியம். ஒன்றிணைந்த இலக்கு மக்களிடையே ஒருமித்த எண்னம் உருவக்குவதற்கும், மக்களைத் திரட்ட

பெரும் உத்வேகம் அளிக்கவும் பெரிதும் உதவும். திட்டமிட்ட செயல்பாடு மக்களிடையே நம்பிக்கையை வளர்க்க உதவும்.இத்துடன், மக்களின் வெவ்வேறு நிலையில் உள்ள தாங்குசக்திக்கும், இருக்கும் நேரத்திற்கும், இயக்கத்திற்கு அவர்களால் எந்த அளவுக்குத் தியாகம் செய்ய முடியும் என்பதற்கு ஏற்றபடியும் திட்டங்களை வகுக்க முடியும். பயனுள்ள விதத்தில் வகுக்கப்படும் திட்டம், ஏழைகள், பணக்காரர்கள், இளைஞர்கள், வயதானவர்கள், இந்தத் தர்ப்பினர்களுக்கு இடைப்பட்டவர்கள் ஆகிய அனைவருமே, குறைவாகவோ, அதிகமாகவோ தங்களது பங்களிப்பைச் செய்ய இயலக்கூடிய வகையில் இருக்கும். உடல் வலிமை உள்ள ஆண்கள் மட்டுமே ஆயுதம் ஏந்திப் போராட முடியும் என்னும் நிலைக்கு மாறானது இது. அகிம்சை என்றாலே பொது மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்புடையதாகவே இருக்கும்.

## 5. ஒடுக்குமுறையின் குறையும் தாக்கமும், அதிகரித்துவரும் எதிர்வினையும்

சர்வாதிகாரியின் சக்தி வாய்ந்த ஆயுதம், ஒடுக்குமுறையை அமல்படுத்த முடிவதுதான். இதைப் பற்றி நன்கு அறிந்த இயக்கத்துக்கு ஒடுக்குமுறையின் தாக்கத்தைக் குறைப்பது எப்படி என்பது தெரியும், அப்படிப்பட்ட ஒடுக்குமுறையை அமல்படுத்துவதற்கான செலவினத்தை அதிகப்படுத்தவும் தெரியும். இதைச் செய்வதற்கு அவர்கள் கடைப்பிடிக்கும் வழி, அதில் இருக்கும் அபாயம் குறித்து சரியான மதிப்பீடு செய்வதுதான். அதற்கேற்ற உபாயங்களையும் தேர்வு செய்கின்றனர். எல்லா உத்திகளுக்கும் ஒடுக்குமுறை எதிர்வினையாக இருக்காது என்பதையும் தெரிந்துவைத்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்த நடவடிக்கைகளாக இருக்கும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படலாம். ஆங்காங்கே தனித்தனியாக நடத்தப்படக்கூடிய, நுகர்வோர் பொருட்கள் புறக்கணிப்பு, வீட்டிலேயே இருப்பது, பள்ளிகளுக்குச் செல்லாமல் இருத்தல், மருத்துவ விடுப்பு எடுப்பது, அனாமதேயமாகப் பொது இடங்களில் குறிப்பிட்ட சின்னங்களை வரைவது ஆகியவற்றை ஆட்சியாளர்களால் எளிதில்

கட்டுப்படுத்த முடியாது. இவற்றுக்கு எதிராக ஒடுக்குமுறையைப் பயன்படுத்தவும் முடியாது. ஏனென்றால் இதைச் செய்பவர்கள் யார் (உதாரணமாக, நுகர்பொருளைப் புறக்கணிப்பவர்) என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. அது போலவே, உடல் நிலை சரியில்லை என்று வேலைக்குச் செல்ல மறுக்கும் வீட்டில் உள்ள தொழிலாலர்களைச் சோதிக்க காவல் துறையினர் சென்றாலும் அவர்களால் தொழிளாளருக்கு உடல் நிலை சரியாக உள்ளது என்பதை நிரூபிக்க முடியாது.

1983ஆம் ஆண்டில் சிலி நாட்டில், அரசியல் அதிருப்தியாளர்கள் அகஸ்டோ பினோசெட்டின் சர்வாதிகாரத்தை எதிர்த்தார்கள். அவரது ஒடுக்குமுறையினால் பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. ஒரு தலைமுறைக் காலம் நடைபெற்ற கொடுமைகளால் (மொத்தமாகக் கைது செய்தல், படுகொலைகள், சித்திரவதைகள், பலர் மறைந்துபோன சம்பவங்கள்) மக்கள் ஒன்றாகக் கூடுவதற்கோ, மற்றவர்களைத் திரட்டுவதற்கோ நடுங்கினார்கள். அந்த வருட ஏப்ரல் மாதத்தில், தாமிரச் சுரங்கங்களில் தொழிலாலர்கள், சாண்டியாகோவிற்கு வெளியே வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தார்கள். ஆனால் இதை ஒடுக்க, வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தனது ராணுவத்தை அனுப்பி அந்த இடத்தைச் சுற்றி வளைத்தார் பினோசெட். அறிவித்தபடி வேலைநிறுத்தம் நடந்தால், ரத்த வெள்ளத்தைச் சந்திக்க நேரிடும் என்று அறிவித்தார். இப்படிப்பட்ட ஒடுக்குமுறையினால் தொழிலாளர் தலைவர்கள், வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர். அதற்கு பதிலாக, தேசிய எதிர்ப்பு நாள் அனுசரிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். இதில் பங்கு கொள்பவர்கள் தங்களது வேலைகளை மெதுவாகச் செய்வார்கள், மெதுவாக நடப்பார்கள், மெதுவாக வண்டி ஓட்டுவார்கள், இரவு 8 மணியளவில் பாத்திரங்களை மோதிச் சத்தம் ஏற்படுத்துவார்கள். இந்த நடவடிக்கைகளுக்குப் பெரிய அளவில் வரவேற்பும் பங்கேற்பும் இருந்தன. இதேபோல மாதா மாதம் எதிர்ப்பு தொடர்ந்தது.

இதுதான் மக்களிடையே பரவியிருந்த பயத்தைப் போக்க எடுக்கப்பட்ட முதல் பெரிய அளவிலான நடவடிக்கை. இதுதான் பினோசெட்டின் ஆட்சியில் நிகழ்ந்த மிக முக்கியமான திருப்புமுனை என்றும் சொல்லலாம். இதில்

பங்கேற்பாளர்கள் பெரும் ஆபத்தில் சிக்க மாட்டார்கள் என்பது மட்டுமின்றி, இவற்றை யாராலும் அடக்க முடியாது. இதுபோன்ற பல இடங்களிலும் பரவலாக நடந்த செயல்களுக்கு எதிராக பினோசெட்டின் ராணுவத்திடம் பதில் நடவடிக்கை எதுவும் இல்லை

ஒடுக்குமுறையின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அல்லது அதன் செலவினத்தை அதிகப்படுத்துவதற்கு, மற்றும் அது போன்ற செயல்கள் எதிர் பாதிப்பு உண்டாகச் செய்வதற்கு, சில குறைகளை அரசியலற்ற முறையில் வெளிப்படுத்துவது இன்னொரு வழி (உதாரணமாக, நடைபெற்றுவரும் ஆட்சியைப் பதவி விலகச் சொல்வதற்குப் பதிலாக, குடி தண்ணீருக்கான கோரிக்கை, பாதுகாப்பான சூழ்நிலை, போன்ற கோரிக்கைகளை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்துவது). இயக்கத்தின் தலைமையிலிருந்து துவங்கி அடுத்தடுத்து யார் தலைமைப் பொறுப்பு ஏற்பது என்பனவவற்றைப் பற்றித் தெளிவாக முடிவு செய்வது, இயக்கத்தின் செயல்பாடுகளில் பங்கு கொள்பவர்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேசக் குழுக்கள் ஆகியோருக்கிடையே இருக்கும் சமூக இடைவெளியை இணைக்கும் விதத்தில் பாலம் போலச் செயல்படுவது, அதன் மூலம் இயக்கத்திற்கு எதிரான அடக்குமுறை அரசுக்கு பின் விளைவுகளை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்வது போன்றவற்றைச் செய்யலாம்.

உதாரணமாக, 2010இல், எகிபதைச் சேர்ந்த வலைப்பூ எழுத்தாளர் (Blogger) காலெட் சையத் என்பவர் எகிப்திய அரசின் ஊழல்களைப் பற்றி எழுதினார் என்பதற்காக, பாதுகாப்புப் படையினர், வலைதளத் தொடர்பு மையம் ஒன்றிலிருந்து, வெளியே இழுத்து வந்து, அடித்துக் கொன்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பலரும் ஒன்று சேர்ந்து, ‘நாங்கள் அனைவரும் காலெட் சையத்’ என்ற பெயரில் முகநூல் குழு ஆரம்பித்தனர். சையத் சாதாரண எகிப்தியர்களுடன் ஒத்த கருத்தையே கொண்டிருக்கிறார் என்பதை அவர்கள் இவ்வாறு வலுவாகப் பதிவு செய்ததன் பலனாக, அரசின் அடக்குமுறை அரசுக்கே பாதிப்பு ஏற்படுத்தியது.

**6. ஒரு இயக்கத்தின் எதிர்த் தரப்பிலிருந்து அணி மாறுபவர்கள் அதிகரிப்பு**

குடிமைச் சமூக எதிர்ப்பு காலப் போக்கில் முன்னேற்றம் அடையும்போது அதன் எதிர்த் தரப்பினரிடமிருந்தும், மௌனமான ஆதரவாளர்களின் விசுவாச மாற்றங்கள் மற்றும் அணி மாற்றங்கள் ஆகியவற்றை உருவாக்கும். உதாரணமாக, சீர்திருத்தவாதிகள், மற்றும் அரசாங்கத்தில் உள்ள தீவிரப் போக்குக் கொண்டவர்களிடையே அதிகாரப் போட்டி நடக்கும். இது அனைவரும் அறிய நடக்கும். பொருளாதார பாதிப்புகளைத் தவிர்க்கவும் வர்த்தகம் மறுபடியும் சீராகவும் அரசாங்கம், இயக்கத்தினரின் கோரிக்கைகளை ஏற்க வேண்டிவரலாம். அரசின் முக்கியத் துறைகளான, காவல் துறை, அதிகார வர்க்கம் முதலான துறைகள் தங்களது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள ஆரம்பிக்கலாம். இயக்கத்தின் பல கோரிக்கைகளால் ஈர்க்கப்பட்டு இந்த மாற்றம் நடக்கலாம். அரசாங்கத்தின் பல்வேறு விதமான நடவடிக்கைகளால், வெறுத்துப்போய் மாறலாம். அவர்களது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் ஆகியோர் குடிமைச் சமூக இயக்கங்களில் சேர்ந்திருக்கலாம். அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்த மேல்தட்டு மக்களும் அது தொடர்ந்து அதிகாரத்தில் இருக்குமா என்பது குறித்து சந்தேகப்படத் துவங்குவார்கள். அதனால் அவர்கள் நடுநிலை வகிக்கத் துவங்குவார்கள். குடிமைச் சமூக இயக்கம் வென்றால், வரலாற்றின் தவறான பக்கத்தில் இருக்கக் கூடாது என்ற எச்சரிக்கையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கும்.

2004இல் உக்ரேனில் நடந்த ஆரஞ்சுப் புரட்சியின்போது அரசின் எதிர்ப்பாளர்கள், வேண்டுமென்றே, ராணுவத்துடன் நேரடித் தொடர்பு வைத்துக்கொண்டார்கள். இதற்கு ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் கூட்டமைப்பை இடையீட்டாளர்களாகப் பயன்படுத்திக்கொண்டனர். காலப் போக்கில் எதிர்க்கட்சியினர் தங்களது நடவடிக்கைகளின் மூலம் தாங்கள் அகிம்சையில் நம்பிக்கை உள்ளவர்கள் என்பது மட்டுமின்றி நியாயத்திற்குக் கட்டுப் பட்டவர்கள் என்பதையும் உணர்த்தினார்கள். பாதுகாப்புப் படையினரைப் பொது மக்கள் நலனைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். சமூக இடைவெளியைக் குறைக்க, சகோதரத்துவத்தை வலியுறுத்தி, கோஷங்கள், நடவடிக்கைகள் (கலவரத் தடுப்புப் படையினருக்கு ரோஜாப் பூக்கள் வழங்குதல்), அரசாங்கத்தின் லஞ்ச லாவண்யங்களை

வெளிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளால், இறுதியில் பாதுகாப்புப் படையினரின் விசுவாசத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தது.

இதனால் ஒடுக்குமுறை நடவடிக்கைகளின்போது, உக்ரேனின் காவல் துறையினரும், படை வீரர்களும், நடுநிலை வகித்தனர். செர்பியாவின் மிலோசெவிக் ஆட்சியிலும் பாதுகாப்புப் படையினர், அரசின் உத்தரவுகளை ஆர்வத்துடன் செயல்படுத்தாமல் விட்டுவிட்டனர். அக்டோபர் 5ஆம் தேதியன்று ஓட்போர் இயக்கத்தின் மிகப் பெரிய பேரணி நடந்தது. அந்தச் சமயத்தில் ஹெலிகாப்டரிலிருந்து குண்டு வீச மறுத்துவிட்டார் ஒரு போலீஸ் அதிகாரி. அன்றைய தினம் வானிலை மோசமாக இருந்ததால் தன்னால் கீழிருந்த கூட்டத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை என்று தன் செயலுக்கு அவர் விளக்கமளித்தார். ஆனால் அன்றைய தினத்தில் சூரிய வெளிச்சம் மிகப் பிரகாசமாக இருந்தது. ஆனால் அவர் அந்த ஆயுதங்களை உபயோகிக்காததற்கு உண்மையான கரணம், அந்த பேரணியில் அவரது குடும்ப உறுப்பினர்களும் கலந்திருக்கலாம் என்று அவர் நினைத்ததுதான்.

சுயநலத்துக்காகவோ, வலியுறுத்தல்களுக்காகவோ, இது போன்ற அணி மாற்றங்கள் நிகழ்ந்தன. இது போன்ற மாற்றங்கள், நீண்ட நாள் செயல்பாடுகளால் மட்டுமின்றி, குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கம் வினையூக்கிபோலச் செயல்படுவதாலும், சாத்தியமாகின்றன. முன்னர் குறிப்பிட்ட இரண்டு வகையான திறன் பட்டியலின் போக்குகள் போல இது போன்ற போக்கும் இயக்கம் என்பது, ஒற்றுமை, திட்டமிடல், அகிம்சைச் செயல்பாட்டு முறைமை ஆகியவற்றின் முழு உருவமாகக் கருதப்படுவதால் உருவாகிறது. பல்வேறு வகைப்பட்ட மனிதர்களின் பங்கேற்பு, பல்வேறு தரப்பட்டவர்கள் அதிக அளவில் அணி மாற்றங்களுக்குக் காரணமாகிறது என்பதையே திரட்டப்பட்ட தரவுகள் குறிக்கின்றன. ஒற்றுமை, திட்டமிடல், அகிம்சைச் செயல்பாட்டு முறைமை ஆகியனவும் பல்வேறு தரப்பட்ட மக்கள் இயக்கத்தில் இணைந்து செயல்படக் காரணங்களாகின்றன. குறிப்பாக அகிம்சைச் செயல்பாட்டு முறைமைதான் அணி மாற்றங்களுக்கு முக்கியக் காரணமாக இருக்கிறது.

ஒரு இயக்கம், வன்முறை வழிக்கு மாறாமல், அகிம்சை இயக்கமாக இருக்கும் வரையில், (2011இல் சிரியாவில் நிகழ்ந்ததுபோல அல்லாமல்), அந்த இயக்கம் தொடர்ந்து போராடவும் அணி மாற்றங்களுக்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கவும் முடியும். நடக்கும் ஆட்சியில் உள்ளிருந்தே விசுவாசங்கள் மாறும் நிலை உருவாகும்போது, வன்முறை சார்ந்த கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல் ஏதும் இல்லாமல் இருந்தால், இத்தகைய மாற்றங்கள் தொடர்ந்து நிகழும். அதனால் எதேச்சாதிகார ஆட்சியின் அதிகாரக் கட்டமைப்புக்குத் தொடர் அச்சுறுத்தலும் இருக்கும்.

**இயக்கத்துக்கு வெளியில் இருப்பவர்கள் பெறக்கூடிய பலன்கள்:**

தேவையான திறன்கள் குறித்த இந்தப் பட்டியல், எதிர்ப்பாளர்களுக்கு மட்டுமான வழிகட்டி அல்ல. மற்ற பிரிவினருக்கும் இது பயனுள்ளதாக இருக்கும். மற்றவர்களும் தத்தமது துறைகளில் இதைப் பொருத்திப் பார்த்து, தங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணமாக இது போன்ற பட்டியல் பத்திரிக்கையாளரிடம் இருந்தால், அதைப் பற்றிய கூடுதல் புரிதலுடன் செய்திகளை அணுகி மக்களுக்குத் தருவார். பிரச்சினை குறித்த, உள்ளார்ந்த ஆழமான புரிதலை இதுபோன்ற பட்டியல் தரும். உதாரணமாக, 2014 ஆரம்பத்தில், கீய்வில், மொலோடோவ் கலவையால் (Molotov cocktail) ஆன குண்டு வீச்சைப் பற்றி அறியும் ஒரு பத்திரிகையாளருக்கு, அதுபோன்ற வேறொரு சம்பவம் குறித்து ஊடுருவிப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். பிரச்சினை மேலும் மோசமாகுமா என்பதை இந்தத் தகவலின் வெளிச்சத்தில் அவரால் ஊகிக்க முடியும். ஆனால் இயக்கத்தின் ஒற்றுமை, திட்டமிடும் திறன், அகிம்சை முறைப் பிரிவுகளின் ஆதாரங்கள், குடிமைச் சமூக மக்களின் அதிகரிக்கும் பங்கேற்பு, ஒடுக்குமுறை குறைந்தால் இயக்கத்தின் மேல் ஏற்படும் தாக்கம், பாதுகாப்புப் படையினர் அரசின் உத்தரவுகளை முழுமையாக நிறைவேற்றுகிறார்களா அல்லது அணி மாறவும் செய்கிறார்களா ஆகியன குறித்த தகவல்கள் மிகத் துல்லியமாக ஒரு விஷயத்தைப் புலனாய்வு செய்வதற்கான அம்சங்கள் என்று கூறலாம். இவற்றுடன் வர்த்தகர்களின் ஆதரவையும் இழந்தால், என்ன ஆகும் என்பது இந்த வருடம் பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி நாட்டை விட்டு ஓடிய உக்ரேனின்

அதிபர் யானுகோவைச்சின் நடவடிக்கையிலிருந்து புரிந்துகொள்ள முடியும். இங்கு, மோசமான அரசு மிக மோசமான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. அந்த வன்முறை நேரெதிரான விளைவுகளை ஏற்படுத்திய சில மணிநேரங்களிலேயே, அதிபர் நாட்டை விட்டு ஓடிப் போனார். இதுபோன்ற குறிப்பான்களைச் சரியாக புரிந்து கொள்ள முடிந்தால், இது போன்ற பிரச்சினைகளில் பத்திரிகையாளரின் பார்வை தொலைநோக்கு கொண்டதாக, உண்மைகளை ஊடுருவதாக, வரக்கூடியதை முன்பே ஊகித்து அறியக்கூடியதாக இருக்கும்.

2011ஆம் ஆண்டில், சிரியாவிலுள்ள குடிமைச் சமூக எதிர்ப்பாளர்கள் இயக்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் 2011ஆம் ஆண்டில் எதிர்ப்புப் போராட்டத்திற்கான திறன்களின் பட்டியலை முறையாக ஆராய்ந்திருந்தால், அஸ்ஸாத் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் வென்றிருப்பதற்கான வாய்ப்புகளைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கும். ராணுவத்திலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையில் படை வீரர்கள் (ஸன்னி பிரிவைச் சேர்ந்த ராணுவத்தினரைத் தவிர) தங்களது விசுவாசத்தை மாற்றிக்கொண்ட நிலையைச் சரியாகக் கவனித்திருந்தால், வெற்றி பெற அது மிகச் சரியான வாய்பு என்பதை உணர்ந்திருப்பார்கள். வர்த்தகச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது ஆதரவை விலக்கிக்கொண்டது மற்றொரு குறிப்பான். இதன் பின்னணியில் வைத்துப் பார்த்தால், 2012இன் ஆரம்ப கட்டத்தில் சிரியன் விடுதலை ராணுவத்தை, அஸ்ஸாதின் மீதமுள்ள அலாவைட் படைகளுடன் மோதவிட்டது நேரெதிரான விளைவுகளை ஏற்படுத்தியது மட்டுமின்றி வரக்கூடிய பெரும் அவலத்தைச் சுட்டிக் காட்டுவதுபோல அமைந்தது. .

மண்ணின் மக்களுக்கு அதிகாரம் பெற்றுத் தர வெளிநாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய உதவிகள் எத்தகையதாக இருக்கலாம் என்பது குறித்த பட்டியலை உருவாக்க முடிந்தால் மிகவும் உதவிகரமாக இருக்கும். இதில் இருக்கும் முதல் மூன்று செயல் திறன்கள் அனைத்தும் திறன்களை அடிப்படையாகக் கொண்டவை. இதை மிக வலுவான தகவல் தொடர்புப் பரிமாற்றத்தின் மூலம் செய்ய முடியும். உலகளாவிய மனித உரிமைகள் அறிவிக்கையின் சட்டப் பிரிவின்படி, எந்தச் சர்வாதிகாரியும் அவரது நாட்டு எல்லைப்புறங்களில் தகவல் தொடர்புப் பகிர்தலைத் தடுக்க முடியாது.

அதேபோல இத்தகைய தகவல்களை, குடிமக்கள் மூலமாக எதிர்ப்பாளர்களுக்கு மாற்றினால் அவர்களை அதற்காகத் தண்டிக்க முடியாது. இதில் உள்ள ஆறு அம்சங்களுமே, புதிதாகக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பங்களுக்கான வழிப் பாதைகளைக் குறித்த எண்ணத்தை உருவாக்கும். இது, மூவகைத் திறன்களையும் போக்குகளையும் வளர்க்க வழி வகை செய்யும்.

**நமது எதிர்காலத்தை வடிமைக்கும் அம்சங்கள் மற்றும் போராட்டங்கள்** :

அகிம்சைப் போராட்டங்கள் நடக்கும் சூழ்நிலைகள் சிக்கலானவை. கீழ்மட்டம் வரையிலான குடிமைச் சமூக எதிர்ப்பாளர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது இதற்கு அவசியமானது. வெற்றி பெறத் தேவையான உபாயங்களை வரிசைக் கிரமமாகத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியிருக்கிறது. இது பெரும்பாலான சமயங்களில் பெரும் குழப்பமான மனநிலையைத் தோற்றுவிக்கும். தங்களது தவறான முடிவினால் மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் என்ற அச்சமும், சுதந்திரத்திற்கு இடர்ப்பாடு அதிகமாகும் என்ற உணர்வும் சர்வாதிகாரி எதிர்பார்க்கும் மந்தமான செயல்பாட்டிற்குக் கொண்டுசெல்லும். சர்வாதிகாரி அசைக்க முடியாதவர் என்ற கற்பனையை வலுவாக்கும்.

இதுபோன்ற குழப்பமான சூழ்நிலையில், எதிர்ப்புப் போராட்டங்கள் குறித்த பட்டியலில் உள்ள அம்சங்கள், முன்னேறிச் செல்வதற்குச் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க உதவும். வெவ்வேறான பல விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலையில், சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, இதுபோன்ற பட்டியலைச் சார்ந்திருப்பது, மிக எளிமையான தீர்வாக இருக்கிறதே என்று சிலர் வாதிடலாம். எதிர்காலத்தில் உருவாகக்கூடிய பிரச்சினைகளின்போது எடுக்க வேண்டிய முடிவுகளை மதிப்பீடு செய்வதற்கு, அந்த நேரம், இடம் ஆகியவற்றுக்கு ஏற்றாற்போல் தனித்துவமானதாக, அதி தீவிர கவனம் தேவைப்படும் என்றெல்லாம் கூறுவார்கள். புதிய சிக்கல்களைத் தீர்க்கப் பழைய தகவல்கள் பயன்படாது என்றும் சொல்லப்படுகிறது.

போராட்டத் திறன்கள் குறித்த பட்டியலின்படி செயல்படுவது என்றால் ஒரு சூழ்நிலையின் குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவது என்பதல்ல. மாறாக, இவற்றை விரிவான திட்டக் கட்டமைப்பின் அடிப்படையில் நன்கு புரிந்துகொண்டு அதன் மூலம் குடிமைச் சமூக எதிர்ப்பாளர் இயக்கம் எப்படி, ஏன் வெற்றி பெற முடியும் என்பதை வெளிப்படுத்த உதவும்.

பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையில் இத்தகைய பட்டியல்களின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆய்வு செய்த அதுல் கவாண்டே பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

குடிமைச் சமூக எதிர்ப்பு இயக்கங்களுக்குத் தேவையான திறன்கள் குறித்த பட்டியல் என்பது, நாம் அறிந்திருப்பதற்கு மேலாகப் பல்வேறு விதமான பணிகளில் தோல்வியிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். அவை நமக்கு ஒரு விதமான புரிதலைத் தருகின்றன. நம் அனைவரிடமும், இருக்கும் மன ரீதியான, நினைவுத் திறன் , கவனிக்கும் திறன், முழுமையாக செய்யும் திறன் ஆகியவற்றில் உள்ள  குறைபாடுளை அடையாளம் காட்டுகின்றன.

சிக்கல்கள் நிறைந்த குழப்பச் சூழ்நிலையில், தனி நபர்களுக்கு இருக்கும் அறிதல்களை விட அதிகமான அறிதல் திறன் தேவைப்படும். இத்தகைய சூழலில், யூகிக்க முடியாத விஷயங்களின் பிடியில் நிலைமை இருக்கும்போது இந்தப் பட்டியல் துணை நிற்கும். அற்பமான, ஆனால், முக்கியமான விஷயங்கள் விடுபடாமல் இருப்பதற்கும், இதில் தொடர்புடைய நபர்கள், கலந்து பேசுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் இது உதவும். நுட்பமான, எதிர்பார்க்காத விஷயங்களை நிர்வகிப்பதற்கும் இது மிகவும் உதவியாக இருக்கும்.

வெற்றி பெறப்போவது, சர்வாதிகாரியா, சிவில் குடிமைச் சமூக இயக்கத்தினரா என்பதற்கான இறுதிக் குறிப்பான் இதுபோன்ற பட்டியல்தான் என்று கூற முடியாது.  ஆனால், குடிமக்களின் சுதந்திரத்திற்கான கோரிக்கைப் போராட்டம் நிலைபெற்றுவிட்ட எதேச்சாதிகார அதிகார முறையை வெல்ல முடியுமா என்பதைப் புரிந்துகொள்ளத் தேவையான முக்கியமான தொடர் குறிப்பான்களை, இந்தப் பட்டியல் அடையாளம் காட்டும்.

End notes

1 Based on research by Erica Chenoweth and Maria Stephan, who identify 105 civilresistance campaigns seeking a change of government in countries and territories around the world between 1900-- 2006.

Chenoweth, Erica, and Maria Stephan. 2011. Why Civil Resistance Works: The Strategic Logic of Nonviolent Conflict. New York: Columbia University Press. p. 6

NAVCO 1.1 data available at: http://www.du.edu/korbel/sie/research/chenow_navco_data.html

2 Based on 67 transitions to democracy analyzed between 1972-- 2005 in the researchstudy How Freedom is Won: From Civic Resistance to Durable Democracy. The authors find that:

"The force of civic resistance was a key factor in driving 50 of 67 transitions, or over 70 percent of countries where transitions began as dictatorial systems fell and/or new states arose from the disintegration of multinational states. Of the 50 countries where civic resistance was a key strategy (i.e., either countries in which there were transitions driven by civic forces or countries where there were mixed transitions involving significant input from both civic forces and powerholders), none were Free countries, 25 were Partly Free countries, and 25 were Not Free countries. Today [in 2005], years after the transition 32 of these countries are Free, 14 are Partly Free, and only 4 are Not Free."

Ackerman, Peter, and Adrian Karatnycky. 2005. How Freedom is Won: From Civic Resistance to Durable Democracy. Washington, DC: Freedom House. Pp. 6-- 7

3 Marchant, Eleanor, Adrian Karatnycky, Arch Puddington, and Christopher Walter.

2008. Enabling Environments for Civic Movements and the Dynamics of Democratic Transition. Freedom House special report. July 18. p. 1

4 Ibid. p. 1

5 Chenoweth, Erica, and Maria Stephan. 2011. Why Civil Resistance Works: The Strategic Logic of Nonviolent Conflict. New York: Columbia University Press. p. 6

6 Ibid. p. 9 7 Ibid. p. 68

8 Ibid. p. 62

9 Chenoweth, Erica. 2014 Trends in Civil Resistance and Authoritarian Responses. The Atlantic Council Future of Authoritarianism Project. April 15.

10 Chenoweth, Erica, and Maria Stephan. 2011. Why Civil Resistance Works: The Strategic Logic of Nonviolent Conflict. New York: Columbia University Press. p. 66

11 Thomas C. Schelling. 1968. "Some Questions on Civilian Defence," in Adam Roberts, ed., Civilian Resistance as a National Defence: Non-- violent Action Against Aggression. Harrisburg, PA: Stackpole Books. p. 304.

12 Ackerman, Peter and Jack DuVall. 2000. A Force More Powerful: A Century of Nonviolent Conflict. London: St. Martin’s Press/Palgrave Macmillan. pp. 113-- 174

13 Chenoweth, Erica, and Maria Stephan. 2011. Why Civil Resistance Works: The Strategic Logic of Nonviolent Conflict. New York: Columbia University Press. Pp. 30-- 61

14 Ibid. pp. 30-- 61

15 Ibid. pp. 46-- 49

16 A Force More Powerful. Dir. Steve York. York Zimmerman. 2000. Film.

17 Binnendijk, Anika Locke, and Ivan Marovic. 2006. Power and Persuasion: Nonviolent Strategies to Influence State Security Forces in Serbia (2000) and Ukraine (2004).

Communist and Post-- Communist Studies 39, no. 3 (September). pp. 411-- 429.

18 Interview with Nebojsa Covic, Vecernje Novosti, Oct. 2, 2010.

19 Gawande, Atul. 2009. The Checklist Manifesto: How to Get Things Right. New York:

Picador. p. 47

20 Ibid. p. 79